செ.வெ.எண்.301 நாள்.08.05.2018

திருநெல்வேலி, பாளையங்கோட்டை செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ‘‘சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினத்தையொட்டி’’ ரூ.10 இலட்சம் மதிப்பில் தரம் உயர்த்தப்பட்ட இரத்தப் பரிசோதனை நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ‘‘சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினத்தையொட்டி’’ பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று (08.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, செஞ்சிலுவை சங்க நிறுவனர் திரு.ஹென்றி டுணான்ட் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து செஞ்சிலுவை சங்க வளாகத்தில் சங்க கொடியினை ஏற்றி வைத்தார்.

மேலும், நவீன உபகரணங்களுடன் ஒரு நிமிடத்திற்கு 200 ரத்த மாதிரிகளை மிக துல்லியமாக பரிசோதிக்கும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பில் தரம் உயர்த்தப்பட்ட இரத்தப் பரிசோதனை நிலையத்தினை திறந்து வைத்தார். செஞ்சிலுவைச் சங்க புதிய உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி செஞ்சிலுவை சங்க சேர்மன் மரு.சார்லஸ் பிரேம்குமார், துணைத் சேர்மன் திரு.மரியசூசை, பொருளாளர் திரு.பிரமச்சந்திரன், மருத்துவர்கள் மரு.காசியம்மாள், மரு. துரைராஜ், மரு.பிரேமச்சந்திரன், மரு.சரண்யா, மரு.யாசர் அராபத் மற்றும் அலுவலர்கள் மருத்துவர்கள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.